
# ૩ தனித்திறமை

காட்டின் ராஜாவான சிங்கம் சில நாள்கள் வெளியூர் சென்றபோது புலியிடம் தனது பொறுப்புகளை ஒப்படைத்துவிட்டுச் சென்றது. புலியும் சில நாள்களுக்கு ராஜாவாகப் பதவி ஏற்று கொண்டது. படைத்தளபதியாகச் சிங்கக் குட்டி பொறுப்பேற்றது.






கழுதையாரே ...... உமக்கு உரிய பதவி
ராஜாவே..! ராஜாவே..! இந்தக் கழுதை ஒரு முட்டாள். கழுதையால் எந்த ஒரு பயனும் இல்லை.
அப்படியா..!
இதே போல் முயல், ஆமை இரண்டும் எதற்கும் பயன்படாது.




பண்புகளை வளர்த்தல்

## நீதிக் கருத்து

**ஒவ்வொருவருக்கும் தனித்திறமை உண்டு. அதை அறிந்து சூழ்நிலைக்கு ஏற்பப் பயன்படுத்த வேண்டும்.**

## வாங்க பேசலாம்

காட்டின் அரசனாக சிங்கமே இருக்க வேண்டுமா?
புலி காட்டுக்கு அரசனாக இருப்பது குறித்து உனது கருத்து என்ன?
வகுப்பறையில் விவாதிக்க...

## படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

### சரியான விடையைத் தெரிவு செய்வோமா?

1. தகுதி இச்சொல் உணர்த்தும் பொருள் ....................................

   (அ) தரம் (ஆ) மரம்

   (இ) கரம் (ஈ) வரம்

2. பகைவர்கள் இச்சொல்லின் எதிர்ச்சொல் ....................................

   (அ) நண்பர்கள் (ஆ) எதிரிகள்

   (இ) அயலவர்கள் (ஈ) சகோதரர்கள்

3. பணி இச்சொல் உணர்த்தும் பொருள் ....................................

   (அ) வாழை (ஆ) வேளை

   (இ) வேலை (ஈ) வாளை

4. படைத்தளபதி இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..................

   (அ) படைத் + தளபதி (ஆ) படை + தளபதி

   (இ) படையின் + தளபதி (ஈ) படைத்த + தளபதி

5. எதை + பார்த்தாலும் இதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ....................................

   (அ) எதைபார்த்தாலும் (ஆ) எதபார்த்தாலும்

   (இ) எதைப்பார்த்தாலும் (ஈ) எதைபார்தாலும்

## வினாக்களுக்கு விடையளி

1. காட்டில் விலங்குகளின் கூட்டம் யார் தலைமையில் நடைபெற்றது?
2. புலிராஜா, படைத்தளபதி பொறுப்பை யாருக்குக் கொடுத்தார்?
3. ஆந்தைக்கு என்ன பதவி கொடுக்கப்பட்டது?
4. கரடி எந்தெந்த விலங்குகள் தகுதியற்றவை எனக் கூறியது?
5. இந்தக் கதையின் மூலம் நீ அறிந்து கொள்வது யாது?

## புதிருக்குப் பொருத்தமான படத்தைப் பொருத்துக

பதுங்கிச் செல்வேன்; பாய்ந்து
இரையைப் பிடிப்பேன். நான் யார்?



இரவில் விழித்தும் பகலில் தூங்கியும்
வாழ்வேன்; என் கண்களை
எல்லாத் திசைகளிலும் திருப்புவேன். நான் யார்?



என் காதுகள் நீண்டிருக்கும்; வேகமாக
ஓடுவேன்; கேரட் எனக்கு மிகவும்
பிடிக்கும். நான் யார்?



## முறைமாறியுள்ள சொற்களை முறைப்படுத்தித் தொடர் உருவாக்குக

1. காட்டில் விலங்குகளின் நடந்தது கூட்டம்

2. இரவுக்காவல் நீங்கள்தாம் அமைச்சர் ஆந்தையாரே

3. முயல் ஓடும் வேகமாக அதி

4. கூடாது யாரையும் போடக் எடை குறைவாக

## எந்த விலங்கிற்கு, எந்தப் பணி?

| விலங்குகள் | | பணிகள் |
|---|---|---|
| 1.  | – | பொருள்களைச் சேகரிக்கும் வேலை |
| 2.  | – | எச்சரிக்கைப் பணி |
| 3.  | – | படைத்தளபதி |
| 4.  | – | இரவுக்காவல் |
| 5.  | – | சமையல் வேலை |

## பெயர் எது? செயல் எது?

| | | பெயர் | செயல் |
|---|---|---|---|
| 1. | குழலி பாடம் படித்தாள். | 1. _______<br>2. _______ | 1. _______ |
| 2. | அமுதன் பந்து விளையாடினான். | 1. _______<br>2. _______ | 1. _______ |
| 3. | மரம் செழித்து வளர்ந்தது. | 1. _______ | 1. _______<br>2. _______ |

## மொழியோடு விளையாடு

மாணவர்களை இரு குழுக்களாகப் பிரிக்கவேண்டும் . முதல் குழுவினருக்கு விலங்குகள் மற்றும் பறவைகளின் பெயர் எழுதப்பட்ட அட்டையினை ஒவ்வொரு மாணவனுக்கும் ஒன்று வீதம் கொடுக்க வேண்டும். ஆசிரியர் ஒலிப்பான் மூலம் ஒலி எழுப்பியவுடன் முதல் குழுவில் இருந்து ஒரு மாணவன் தனது அட்டையில் எழுதப்பட்டு உள்ள விலங்கு (அ) பறவை போல நடித்து (அ) ஒலி எழுப்பிக் காட்ட வேண்டும். நடிக்கும் விதத்தை (அ) ஒலியைக் கேட்டு அது என்ன விலங்கு? (அ) பறவை? என்பதனை இரண்டாவது குழுவினர் கண்டறிந்து கூறவேண்டும். இவ்வாறே அனைத்து மாணவர்களுக்கும் வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும்.



# எழுத்துகளின் வகைகள் அறிவோமா?

DTWXXP


குழந்தைகளே! நமக்கெல்லாம் பெயர் இருக்கிறது அல்லவா...

அதுபோல எழுத்துகளுக்கும் பெயர் வைக்கலாமா..


தமிழில் உள்ள உயிரெழுத்துகள் மொத்தம் – 12




இதில்




இந்த ஐந்து எழுத்துகளும் ஓசையில் குறுகி ஒலிக்கின்றன. எனவே, இவற்றிற்குக் குறில் அல்லது குற்றெழுத்துகள் என்று பெயரிடுவோம்.




இந்த ஏழு எழுத்துகளும் ஓசையில் நீண்டு ஒலிக்கின்றன. இவற்றிற்கு நெடில் அல்லது நெட்டெழுத்துகள் என்று பெயரிடுவோம்.

இப்பொழுது மெய்யெழுத்துகளுக்குப் பெயரிடுவோமா...

தமிழில் உள்ள மெய்யெழுத்துகள் மொத்தம் – 18.




இவை ஒலிக்கும் தன்மையை வைத்து மூன்று வகைகளாகப் பிரித்துப் பெயரிடுவோம்.

## வல்லினம்






யானைகள் எப்படி வலிமையாக இருக்கின்றனவோ அப்படியே க், ச், ட், த், ப், ற் – என்ற எழுத்துகளும் வலிய ஓசை உடையவை, எனவே இவற்றுக்கு வல்லினம் என்று பெயரிடுவோம்.

## மெல்லினம்






முயல்கள் எப்படி மென்மையாக இருக்கின்றனவோ அப்படியே ங், ஞ், ண், ந், ம், ன் – என்ற எழுத்துகளும் மெல்லிய ஓசை உடையவை. எனவே இவற்றுக்கு மெல்லினம் என்று பெயரிடுவோம்.

## இடையினம்




மான்கள் யானையைப் போன்று வலிமையாகவும் இல்லை, முயலைப் போன்று மென்மையாகவும் இல்லை, இடைப்பட்ட நிலையில் இருக்கின்றன.

அது போல ய், ர், ல், வ், ழ், ள் – என்ற எழுத்துகளும், வன்மையாகவும் இல்லாமல் மென்மையாகவும் இல்லாமல் இடைப்பட்ட ஓசை உடையதால் இவற்றுக்கு இடையினம் என்று பெயரிடுவோம்.



ஃ என்பது ஆய்த எழுத்து அல்லது தனிநிலை எனப்படும்.

எழுத்துகளின் பெயர்கள் இனிமையாக இருக்கின்றன. அப்படித்தானே!

உங்கள் பெயரிலும் உங்கள் நண்பர்களின் பெயர்களிலும் இடம்பெற்றுள்ள மெய்யெழுத்துகளை வட்டமிட்டுக் காட்டுக